1989 பிப்ரவரி 14] [திரு. எம். முகமது சித்திக்]

அந்தப் பகுதியிலே நல்லபல தொழில் வளங்களை ஏற்படுத்த புதிய திட்டங்களை அரசு உருவாக்க ஆணை பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாலைகள் எல்லாம் மேடு பள்ள மாகக் காட்சியளிக்கின்றன. நீண்டகாலமாக அந்தச் சாலைகள் செப்பனிடப்படவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அங்கே சாலைகள் சில போடப்பட்டன. ஆனால் அந்தத் திட்டம் அங்கே சரியாக நடக்கவில்லை. அங்கே இருக்கிற தலைவர்கள் தங்களைத் தன்னிறைவு செய்து கொண்டார்களே தவிர மற்ற திட்டங்கள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, அந்தச் சாலை களைச் சீரமைத்து, நல்ல சாலைகளாக அமைத்து, புதிய பேருந்து வழித் தடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சாராயக் கடைகளைத் திறப்பதில்லை என்று இந்த அரசு முடிவு செய்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அருள்கூர்ந்து, தன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை மாடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அமர்ந்திருப்பது குறித்து.

* **திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மட்டும் எழுப்ப விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வந்து அமர்ந் திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் அமரக்கூடிய அந்த இடத்தில் வந்து மற்றவர் அமருவது கிடையாது. தற்போது அமர்ந்திருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் எந்த விதிமுறையின் கீழ் இங்கே அமர்ந்திருக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு இதழின் பிரதி நிதியாக வந்து அமர்ந்திருக்கிறாரே தவிர இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்காக வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.